## கொவிட் - 19 காலப்பகுதியில் காணி உரிமையைப் பாதுகாத்தல் மற்றும் உணவுப் பாதுகாப்பை உறுதிப்படுத்தல் பற்றிய ANGOC கூற்று

*கொவிட் - 19 உலகளாவிய தொற்று மக்கள் என்ற வகையில் விரிவடையும் சமத்துவமின்மையைக் கொண்ட இயக்கமற்ற பொருளாதாரம், எமது சுற்றாடலின் அழிவு, புகலிடம் மற்றும் ஜீவனோபாயத்துக்கான காணி மற்றும் இயற்கை வளங்களின் நியாயமற்ற பகிர்வு, அதிகரித்துவரும் மாசடைதல் மற்றும் நெருக்கடியான நகரங்கள், உணவு மற்றும் போசணைக்கான அடிப்படை அணுகல் இல்லாதிருத்தல், உலகளாவிய சுகாதாரப் பராமரிப்பின்மை, இவை எல்லாவற்றுக்கும் மத்தியில் காலநிலை மாற்றத்தினால் எமது கோள் பாதிப்படையும் நிலை ஆகிய எமது பல உள்ளார்ந்த வலுவற்ற நிலைமையையும் இடர்களையும் எமக்கு ஏற்படுத்தியுள்ளது.*

அதேவேளை, பாரிய அளவிலான காடழிப்பு, இயற்கை வாழிடங்களின் தரக்குறைவு மற்றும் துண்டாடல், மிருக இனங்கள் மற்றும் தாவரங்களின் அழிவு, மனித செயற்பாடுகளினால் ஏற்படும் காலநிலை மாற்றம் போன்றவை புதிய நோய்களின் தோற்றத்துக்கு வழிவகுக்கின்றன. உலகளாவிய தொற்று நோய்களில் அரைவாசிக்கு மேல் பண்ணை நிலங்களுக்காகவும் வணிக இடவசதிகளுக்காகவும் காடுகளை அழிப்பதன் விளைவாக விலங்குகளிலிருந்து மனிதர்களுக்கு தொற்றியவையாகும்.

''புதிய இயல்புநிலைக்கு'' (new normal) தயாராகும் அதேவேளை விஞ்ஞானிகளும் மருத்துவ நிபுணர்களும் கொவிட் - 19 நோய்க்கான பரிகாரங்களையும் சார்ஸ் கோவ்-2 (SARS-CoV-2) நோய்க்கான தடுப்பு மருந்துகளையும் கண்டுபிடிப்பதற்கு முயற்சித்ததுடன் பொருளியலாளர்களும், தொழில்நுட்ப அறிஞராட்சிக் கோட்பாட்டாளர்களும் (technocrats) அரசியல் தலைவர்களும் தொற்றுநோய்க்கான பதில் நடவடிக்கைகளை மேற்கொண்டனர். இந்த வருடம் மார்ச் மாதம் முதல், அரசாங்கங்கள் அடிப்படையில் உடல் சார்ந்த இடைவெளி நடவடிக்கைகள், பிரயாண வரையறைகள், ஊரடங்குச் சட்டங்கள் மற்றும் சமுதாய தனிமைப்படுத்தல் ஆகியவற்றின் ஊடாக தொற்றுநோயை நிவர்த்திப்பதற்கு போராடின.

*இருப்பினும், கொவிட் - 19 ஒரு சுகாதார நெருக்கடியாக ஆரம்பித்த அதேவேளை, இந்தத் தொற்று நோய் துரிதமாக பெருமளவில் சிறிய அளவிலான விவசாயிகளுக்கும், கமத்தொழிலாளர்களுக்கும் காணி அற்ற மக்களுக்கும் சேரிகளில் வாழ்வோருக்கும் சுமையாக அமையும் வறுமை, பட்டினி, போசாக்கின்மை ஆகிய நெருக்கடிகளைத் தோற்றுவித்தது.*

கொவிட் - 19 பரவுவதற்கு முன்னர் கூட, 2018ஆம் ஆண்டில் உலகளாவிய ரீதியில் உத்தேசமாக 821 மில்லியன் மக்கள் ஏற்கனவே மந்த போசாக்கு உடையவர்களாகக் காணப்பட்டனர். அவர்களில் குறைந்த வருமானம் உள்ள நாடுகளில் வாழுகின்ற உலகில் பட்டினியால் வாடும் மக்களில் 12.9 வீதமானவர்கள் மந்த போசாக்கு உடையவர்களாவர்.[1]

உணவு வழங்கல் சங்கிலிகளிலும் சந்தைகளிலும் தடங்கல்கள் காரணமாக உணவு முறைமை நேரடியாகப் பாதிப்படைகின்றது. அதேவேளை, குறிப்பாக வறியவர்கள் மற்றும் பாதிப்படையக்கூடியவர்களின் தொழில் இழப்பு மற்றும் கொள்வனவுச் சக்தி குறைவடைவதால் உணவை வினியோகிப்பதற்கான ஆற்றல் தடங்கலுக்கு உள்ளாகின்றது.

*காணி, சந்தைகள் மற்றும் உள்ளீடுகளுக்கான அணுகுதலின்றி ஜீவனோபாயங்கள் மேலும் பாதுகாப்பு குறைந்தவையாகின்றன.* தமது ஜீவனோபாயங்களுக்கு பண்ணை அல்லாத மற்றும் பண்ணைக்கு புறம்பான வேலையில் தங்கியிருக்கும் உணவு உற்பத்தியாளர்கள் தமது தொழிலுக்கு பிரயாணம் செய்ய முடியாமல் தடங்கலுக்கு உள்ளாகின்றனர். நாடளாவிய ரீதியிலான முடக்குதல்கள் (lockdown) மற்றும் வியாபார, பிரயாண மட்டுப்படுத்தல்கள் உணவு சங்கிலிகளைத் தடங்கலுக்கு உள்ளாக்கி, அதனால், கமத்தொழில் பெரும்பாலான நாடுகளின் பொருளாதாரத்தின் முதுகெலும்பாக திகழும் ஆசியாவில் உள்ள சிறிய அளவிலான விவசாயிகளின் ஜீவனோபாயங்கள் முடக்கப்பட்டுள்ளன.

*வைரஸ் பரவுவதைத் தவிர்ப்பதற்காக வீடுகளில் இருக்குமாறு அரசாங்கங்கள் மக்களைக் கோருவதால், காணியைப் பெற்றுக்கொள்ளுதலும் வீட்டு உரிமையும் முன்னொரு போதும் இல்லாதவாறு சிக்கலுக்கு உள்ளாகிவிட்டது.* போக்குவரத்து மீதான வரையறைகளுடன், நாளாந்த கூலித் தொழிலாளர்களும் முறைசாரா

[1] According to the "State of food security and nutrition in the world (SOFI)" (FAO, IFAD, UNICEF, WFP and WHO, 2019). See https://www.wfp.org/publications/2019-state-food-security-and-nutrition-world-sofi-safeguarding-againsteconomic#:~:text=About%20the%20series%3A%20The%20State,challenges%20for%20achieving%20this%20goal

துறை தொழிலாளர்களும் தமது வருமானங்களை இழப்பதுடன் சட்ட ரீதியான உரிமை மற்றும் வாடகையைச் செலுத்த முடியாமை காரணமாக பலர் தமது வீட்டை விட்டு வெளியேறுவதற்கு பலவந்தப்படுத்தப்படுகின்றனர். நகரங்களில் தமது தொழில்களை இழந்து, கிராமங்களுக்கு திரும்பிச் செல்லுமாறு பலவந்தப்படுத்தப்பட்டுள்ள வீடற்றவர்களும் புலம்பெயர் தொழிலாளர்களுமே மிகவும் பாதிப்புக்கு உட்பட்டவர்களாவர். அவர்களின் பலர் தமது குடும்பத்தினருடன் இருப்பதற்காக நூற்றுக்காணக்கான கிலோமீற்றர் தூரம் நடந்து செல்கின்றார்கள். இந்தியாவில், 1.3 பில்லியன் மக்களின் மிகப்பெரிய முடக்கம் காரணமாக பல மில்லியன் மக்கள் தொழில்களை இழந்து மாநகரங்களில் நிர்க்கதிக்கு உள்ளாக்கப்பட்டு தூரப் பிரதேசங்களில் உள்ள தங்கள் கிராமங்களுக்கு ஆபத்தான, நீண்ட பயணங்களை மேற்கொள்வதற்கு கட்டாயப்படுத்தப்பட்டனர்.

*மிகவும் பாதிக்கப்பட்டவர்களிடையே நகர வறியவர்களும் அடங்குவர் -* அவர்கள் வீட்டு உரிமை இன்றி, போதிய காற்றோட்டமும் துப்புரவேற்பாடும் அற்ற நெருக்கமான இடங்களில் களங்கப்படுத்தப்படும் இடரை எதிர்நோக்கி சுகாதார சீர்கேடு ஏற்படும்போது வீட்டுக்கு உரிமையான சமுதாயங்களால் வெளியேற்றப்பட்டனர். சுகாதாரப் பராமரிப்புக்கான அவர்களின் அணுகுதலும் குறைவாக இருப்பதுடன் தொழில் பாதுகாப்பின்மை அவர்களை உணவு விலை அதிகரிப்பினால் பாதிப்படையச்செய்கின்றது. போசாக்கான உணவின்மை அவர்கள் தொற்றுகள் மற்றும் நோய்த்தாக்கம் ஆகியவற்றினால் பாதிப்படைதலை அதிகரிக்கின்றது.

*வறியோர், முதியோர், பெண்கள் மற்றும் சிறுவர்கள் ஆகிய பாதிப்படையும் குழுக்கள் வைரசினால் பாதிப்படையும் பாரிய இடர்களை எதிர்நோக்குவது மட்டுமன்றி, சில துறைகள் மீது கவனம் செலுத்தப்படுவதும் குறைவாகும்.* அரசாங்க வளங்களுக்கான முன்னுரிமைகளிடையேயான போட்டித்தன்மை சுகாதாரப் பராமரிப்பு மற்றும் நீண்ட கால உணவுப் பாதுகாப்பு முன்னுரிமைகளிடையே பதற்றத்துக்கு வழிவகுக்கின்றது. இந்தியாவில், கொவிட் - 19 காரணமாக பாடசாலைகள் மூடப்பட்டதால், 120 மில்லியன் சிறுவர்கள் அவர்களின் பகல் உணவுக்கான அணுகுதலை இழந்தனர். கண்டிப்பான தனிமைப்படுத்தல் ஒழுங்குமுறைபு நிலவியதால் உதவிகளை நாடுவதற்கான குறைவான அணுகுதல் வழிவகைகளுடன் பெண்களும் சிறுவர்களும் வீட்டில் அதிகளவு நேரத்தை செலவிட்ட காரணத்தினால் வீட்டு துஷ்பிரயோக சம்பவங்களும் அதிகரித்தன.

உலகளாவிய தொற்று காரணமாக பொருளாதார வீழ்ச்சி காரணமாக உலகளாவிய வறுமையினால் அரை பில்லியன் மக்கள் அல்லது மொத்த மனிதர்களின் எண்ணிக்கையில் எட்டு சதவீதமானோர் உலகளாவிய வறுமையினால் பாதிக்கப்படுவர் எனவும் 1990 ஆம் ஆண்டிலிருந்து மூன்று தசாப்தங்களில் உலகளாவிய வறுமையின் அதிகரிப்பு இதுவாக இருக்கும் எனவும் ஏற்கனவே மங்கலான எதிர்வுகூறல்கள் தெரிவித்தன.

*குறுகிய கால சமூக மேம்பாட்டு நிகழ்ச்சித் திட்டங்கள், வறியோருக்கான பாதுகாப்பு வலையமைப்பு மற்றும் கூட்டு விடுவிப்பு ஆகியவற்றை அரசாங்கங்கள் வகுத்தன. ஆயினும், மக்களையும் சமுதாயங்களையும் மையத்தில் வைக்கும் அபிவிருத்தி மாதிரியில் தீவிரமான சீராக்கம் மேற்கொள்ளப்படாதவிடத்து, இந்த முயற்சிகள் வெறுமனே எங்களுக்கு ''வழக்கம் போன்று வணிகத்தை'' திருப்பித் தருவதுடன்* இந்த கொவிட் - 19 பதில் நடவடிக்கை நிகழ்ச்சித்திட்டங்கள் அபிவிருத்தி உதவி நன்கொடையாளர்களுக்கு ''குறுகிய கால திருப்தியைத்'' தருவதாகவே அமையும்.

*இந்த உணவு மற்றும் காசு வினியோக நிகழ்ச்சித்திட்டங்கள் உடனடியான பட்டினியைப் போக்கினாலும் கூட, அவை அடிப்படைக் காரணங்களை நிவர்த்திசெய்யமாட்டாது.* பாதுகாப்பு வலையமைப்பு நிகழ்ச்சித்திட்டங்களின் கேள்வி, அவை நீண்ட காலமாக நிலைத்திருக்கக்கூடியவையா என்பதும் அவை நீண்ட கால வறுமை, பட்டினி மற்றும் போசாக்கின்மை ஆகியவற்றிலிருந்து தப்பித்துக்கொள்வதற்கு வறிய மக்களுக்கு வலுவூட்டுமா என்பதுமாகும். ஏற்கனவே, இறுக்கமான வரவு செலவுத் திட்டங்களைக் கொண்ட அபிவிருத்தியடைந்துவரும் நாடுகள் வெளிநாட்டுக் கடன்களை நாடியுள்ளன. அவை தேசிய கடன்களை அதிகரிப்பதுடன் அந்தக் கடன்கள் எமது பிள்ளைகளால் செலுத்த வேண்டி ஏற்படும். மேலும், கொவிட் பதில் நடவடிக்கை நிகழ்ச்சித்திட்டங்களை நடைமுறைப்படுத்துவதில் ஊழல் இருப்பதாக அறிக்கைகள் தெரிவிக்கின்றன.

*முன்னுரிமைகளின் மாற்றம் மற்றும் அரசாங்கங்களின் கவனம் ஆகியவற்றுடன்* சட்ட விரோதமாக மரங்களை வெட்டுதல், சட்டவிரோத சுரங்கத் தொழில் மற்றும் காணி அபகரிப்பு ஆகியவை ஊடாக *தனியாட்களும் குழுக்களும் சூழ்நிலையைப் பயன்படுத்துவதாகவும் அறிக்கைகள் தெரிவிக்கின்றன.* பிலிப்பைன்ஸ் நாட்டில்,

கடந்த மார்ச் மாதத்தில் தனிமைப்படுத்தல் ஆரம்பித்ததில் இருந்து ஆகக் குறைந்தது நான்கு சட்டவிரோத சுரங்கத் தொழில் செயற்பாடுகள் ஆரம்பித்துள்ளன.[2]

அரிசி, தானியங்கள், பருப்புகள், மரக்கறி வகைகள், கடல் உணவுகள் ஆகியவற்றின் பிரதான வழங்குனர்களாக தொடர்ந்தும் இருப்பதன் மூலம், *ஆசியா எங்கும் உள்ள சிறிய அளவிலான விவசாயிகள் தொற்று நோயின் முன் வரிசையாளர்களாக உள்ளனர். ஆயினும், சிறிய அளவிலான விவசாயிகள், உற்பத்தியாளர்கள் மற்றும் கிராமிய கைவினைஞர்கள் மற்றும் சுதேச மக்களுக்கு தொடர்ந்தும்* (அதாவது, காணி, நீர், காடுகள் மற்றும் கரையோரங்கள்) ஆகிய அவர்கள் ஜீவனோபாயத்துக்காக தங்கி வாழும் *உற்பத்தி வளங்களுக்கான அணுகுதலும் கட்டுப்பாடும் இல்லாமல் செய்யப்படுகின்றன.*

ஆசியாவின் சிறிய அளவிலான விவசாயிகள் அவர்களுக்கு எதிராகச் செயற்படும் சேவைகளை அணுகுவதில் சிரமம், கடன் மற்றும் சந்தைகள், பலவீனமான நீடிப்புச் சேவைகள், விலையிடல் கொள்கைகள் போன்ற புதிய தடைகளின் பலவற்றை எதிர்நோக்குவதால், உணவுக் கைத்தொழிலின் கூட்டுக் கட்டுப்பாட்டை அதிகரித்தல் அவர்களின் சூழ்நிலைகளை மேலும் சிக்கலுக்கு உள்ளாக்கியுள்ளது. பெறுமதிச் சங்கிலியிலிருந்து விவசாயிகளை ஒதுக்கி வைக்கும் இந்த நடவடிக்கை கொவிட் - 19 தொற்று நோயின் தாக்குதலினால் மிகைப்படுத்தப்பட்டுள்ளது.

*அரசியல்வாதிகளும் அரச தலைவர்களும் அவ்வாறே தமது அதிகாரத்தை உறுதிப்படுத்துவதற்கு இந்தத் தொற்றுநோயை தமக்கு சாதகமாகப் பயன்படுத்தி பசிக்கும் பட்டினிக்கும் வழிவகுக்கும் சமத்துவமின்மையை மேலும் அதிகரித்துள்ளனர்.* பல ஆசிய நாடுகளில், அதிகரித்த அரச இராணுவமயமாக்கம் மற்றும் ஆக்கிரமிக்கும் பொலிஸ் நடவடிக்கைகள், முரண்பாடான அபிப்பிராயத்தைக் கொண்டவர்கள், ஊடகங்கள் மற்றும் சுதந்திரமான பேச்சு ஆகியவற்றை அரசாங்கம் ஒழுக்குதல் ஆகிய வேதனை மிக்க சம்பவங்களை பொதுமக்களும் அவ்வாறே சமூகச் செயற்பாட்டாளர்களும் சுட்டிக்காட்டுகின்றனர். பிலிப்பைன்ஸ் நாட்டில், கருத்து வேறுபாடு உள்ளவர்கள் மற்றும் செயற்பாட்டாளர்கள் எதிர்க்கட்சியினரை திணறச் செய்வதற்காக சட்டவாக்கம் செய்யப்பட்ட 2020ஆம் ஆண்டின் பயங்கரவாத எதிர்ப்புச் சட்டத்தின் கீழ் அச்சுறுத்தப்படுகின்றனர். அத்தகைய சட்டம் தொற்று நோய் முடக்கக் காலப்பகுதியில் பொதுமக்களின் நுண்ணாய்வும் விவாதமும் இன்றி சட்டவாக்கம் செய்யப்பட்டது.

*இன்று, கொவிட் - 19 எமக்கு எதையேனும் போதித்திருப்பின், அது தனிப்பட்ட முறையில் மாத்திரமன்றி ஒரு சமூகம் என்ற வகையில் கூட்டாகவும் எமது நோய் எதிர்ப்பு சக்தியை மீளக் கட்டியெழுப்ப வேண்டிய தேவையாகும்.*

உலகம் இதே போன்ற நெருக்கடிகளுக்கு எதிராக தொடர்ந்தும் போராடும். ஆனால், எதிர்கால சந்ததியினருக்காக சாத்தியமான மிகச் சிறந்த பயனைப் பெறுவதை உறுதிப்படுத்துவதற்காக நாம் ஒன்றாகச் செயற்பட வேண்டும். எமது சிறுவர்கள் வளர்வதற்கு ஆர்வம் காட்டும், அவர்கள் முன்னேறிச் செல்வதற்கான ஒரு எதிர்காலத்தை நாம் கட்டியெழுப்புதல் வேண்டும். ''பழைய இயல்பு நிலைக்கு'' திரும்பிச் செல்லுதல் – வழக்கம் போன்று நிலவும் நிலைமையும் வணிகமும் ஆகாது. பதிலாக, சமூகங்களும் சமுததாயங்களும் மீட்சி பெற்று சிறப்பாக மீண்டும் கட்டியெழுப்பப்படுதல் வேண்டும். ஐ.நா. செயலாளர் நாயகம் அன்டோனியோ குட்டறஸ் கூறியவாறு ''தொற்றுநோய்கள், காலநிலை மாற்றம் மற்றும் நாம் எதிர்நோக்கும் பல்வேறு உலகளாவிய சவால்களுக்கு மேலும் மீளும் தன்மையுள்ள மேலும் சமத்துவமான, உள்ளடக்கிய மற்றும் நிலைபேறான சமூகங்கள்'' [எம்மால் கட்டியெழுப்பப்படுதல்] வேண்டும்.[3]

*அபிவிருத்தி சட்டகங்கள் மக்கள் மீதும் சுற்றாடல் மீதும் முதன்மை அளிப்பவையாக மாற்றப்படுதல் வேண்டும்.* நிலம் மற்றும் இயற்கை வளங்களுக்கான அணுகுதலும் அவற்றின் கட்டுப்பாடும் சிறிய அளவிலான உற்பத்தியாளர்களின் கைகளில் இருத்தல் வேண்டும் - அணுகக்கூடியதும் வாய்ப்பானதுமான போதிய, பாதுகாப்பான மற்றும் போசாக்குள்ள உணவுகளை அவர்கள் உறுதியாக உற்பத்தி செய்வதற்கான ஆற்றலை உறுதிப்படுத்துவதற்கு போதியளவு அரசாங்க ஆதரவு வழங்கப்படுதல் வேண்டும். புதிய நோய்கள் தோன்றி பரவுவதை தவிர்ப்பதற்கு உயிர் பல்வகைத் தன்மையைப் பேணுவதில் சுதேச மக்களும் காடுகளில் வாழ்வோரும் வகிக்கும் பங்கு கண்டுணரப்படுதல் வேண்டும். மேலும், தொற்று நோய்கள் போன்ற நெருக்கடிகளினால் கொண்டுவரப்படும் சடுதியான அதிர்ச்சிகளுக்கு மக்களும் அரச உட்கட்டமைப்பும் ஈடு

[2] As shared by Alyansa Tigil Mina during the Webinar on "COVID-19 in the Age of Extractivism and Climate Change - Voices From the South," 22 April 2020, organized by Peoples Dialogue.

[3] Shared responsibility, globalsolidarity: Responding to the socio-economic impacts of COVID-19 (March 2020). See https://www.un.org/sites/un2.un.org/files/sg_report_socio-economic_impact_of_covid19.pdf

கொடுப்பதை உறுதிப்படுத்துவதற்கு பொருளாதார நிலைமைகள், நியாயமான கூலிகள், விரிவான பொது சுகாதாரம் ஆகியவற்றுக்கு முன்னுரிமை அளிக்கப்படுதல் வேண்டும்.

எல்லோருக்கும் உணவு கிடைப்பதை நாம் உறுதிப்படுத்த வேண்டுமாயின், - அதாவது உணவு சமமாக வினியோகிக்கப்பட்டு வறியோருக்கும் ஓரம்கட்டப்பட்டவர்களுக்கும் அணுகக்கூயதாகச் செய்வதை உறுதிப்படுத்துவதாயின், நாம் எமது கோட்பாட்டு நிலையை மீண்டும் சிந்திக்க வேண்டிய தேவை உள்ளது. அரசுகள் உலகளாவிய மற்றும் தேசிய பெறுமதிச் சங்கிலிகள் மீது மாத்திரம் அவற்றின் கவனத்தைச் செலுத்தினால் போதாது. ஒட்டுமொத்த உணவு முறைமைகளின் உபாயமாக, எல்லோருக்கும் உணவு கிடைப்பதை உறுதிப்படுத்துவதற்காக அரசாங்கங்கள் குறித்த ஆதரவை வழங்கி உள்நாட்டு உணவு முறைமைகளையும் சிறிய அளவிலான உணவு உற்பத்தியாளர்களையும் பலப்படுத்துதல் வேண்டும்.

நீடித்த உணவுப் பாதுகாப்பைக் கட்டியெழுப்புவதற்கு அடிப்படையான செயற்பாட்டுக் கோட்பாடு முடியுமானவரை உணவுக் கிலோமீற்றர்களைக் குறைத்தல் அல்லது “உணவு உற்பத்தி செய்யும் இடத்துக்கும் அதே உணவு நுகரப்படும் இடத்துக்கும் இடையிலான தூரத்தைக் குறைப்பதாகும்.[4] சமுதாய தலைமையிலான மீட்சி மற்றும் பதில் நடவடிக்கை முறைமைகள் ஆகியவற்றை நோக்கிய நிலை மாற்றம் எமக்குத் தேவை.

*காணி மற்றும் வளங்களுக்கான சிறிய அளவிலான உற்பத்தியாளர்களின் உரிமைகளை இந்த அணுகுமுறை உறுதிப்படுத்துதல் வேண்டும்.* சிறிய அளவிலான உற்பத்தியாளர்களுக்கு நேரடியான அணுகுதல் கிடைக்கின்றதும் தமது உற்பத்திகளுக்காக அவர்களுக்கு நியாயமான விலைகள் கிடைக்கின்றதுமான உள்நாட்டுச் சந்தைகளை அபிவிருத்தி செய்வதில் நாம் எமது கவனத்தைக் குவித்தல் வேண்டும். இது உற்பத்தியாளர்களுக்கும் நுகர்வோருக்கும் இடையில் நேரடியான தொடர்பையும் வகைகூறலையும் கட்டியெழுப்பி, புதிய உற்பத்திகளை வழங்குவதுடன் பரந்த தூரங்களுக்கு உணவைக் கொண்டுசெல்வதுடன் தொடர்பான காபன் வெளியேற்றத்தையும் குறைக்கும்.

*கமநல மறுசீரமைப்பு மற்றும் காணி உரிமைப் பாதுகாப்பு ஆகியவை தேசிய அபிவிருத்தி உபாயங்களின் ஒருங்கிணைந்த பகுதியாக இருத்தல் வேண்டும்.* ஆதரவுச் சேவைகள், கமத்தொழில் சூழலியல் வேளாண்மை தொழில்நுட்பங்கள், நிலைபேறான வள முகாமைத்துவம் மற்றும் சமுதாய வலுவூட்டல் ஆகியவற்றுடன் மேலும் சமத்துவமான காணி மீள் வினியோகத்தினால் மாத்திரமே ஆசியாவில் நிலைபேறான உணவில் சுய பூர்த்தியும் அபிவிருத்தியும் அடையப்பெறும்.

காணி என்பது ஒரு பொருளாதார சொத்து அல்லது பொருள் மாத்திரம் அல்ல. காணிக்கான அணுகுதல் பிழைப்பதற்கான ஒரு வளத்தைக் கொண்டுவருவது மாத்திரமன்றி, ஒருவரின் மனித கண்ணியம் மற்றும் பாதுகாப்பு உணர்வையும் பட்டினி மற்றும் வறுமையிலிருந்து விடுபடுவதற்கான வாய்ப்பையும் வழங்குகின்றது. மேலும் சமத்துவமான காணிக்கான அணுகுதல் முரண்பாடுகள் மற்றும் கிராமத்தை விட்டுப் புலம் பெயர்தல் ஆகியவற்றைக் குறைத்து, பாரிய பொருளாதார மற்றும் அரசியல் உறுதிப்பாட்டுக்கான ஒட்டுமொத்த சமாதானத்தை மேம்படுத்துகின்றது.

*சிறிய அளவிலான உற்பத்தியாளர்கள் தமது காணிகள் மீதான உரிமையையும் கட்டுப்பாட்டையும் கொண்டிருத்தல் வேண்டும்; அத்துடன் சுதேச சமுதாயங்களின் பாரம்பரிய காணி ஆளுகை முறைமைகளை உள்ளிட்ட அவர்களின் காணிகள் மீதான உரிமைகள் அங்கீகரிக்கப்படுதல் வேண்டும். இவை முரண்பாடுகளைக் குறைத்து வளங்களின் நிலைபேறான முகாமைத்துவத்தை உறுதிப்படுத்துவதற்கு அவசியமானதும் அத்தியாவசியமானதுமான நடவடிக்கைகளாகும்.*

*அத்துடன் உரிமைப் பாதுகாப்பு சிறிய அளவிலான வேளாண்மையில் நிலைநிறுத்தப்பட்டுள்ள பல்வகைப்படுத்தப்பட்டதும் நிலைபேறானதுமான விவசாயத்தின் தேவையாகும்.* வரலாற்றில், சிறிய அளவிலான விவசாயிகளும் உற்பத்தியாளர்களும் ஆசிய விவசாயம் மற்றும் உணவுப் பாதுகாப்பின் முதுகெலும்பாக சேவையாற்றியுள்ளனர். உலகின் விவசாயக் குடும்பங்களில் 75 வீதமானோரின் வாழ்விடம் ஆசியாவாகும். அவர்களில் 80% சிறிய அளவிலான விவசாயிகளும் உற்பத்தியாளர்களுமாவர்.

*கைத்தொழில் விவசாயத்திலிருந்து* மண்ணுக்குப் புத்துயிரளித்து, பயிர்களுக்கு வளமூட்டி, பீடைகளை ஒழிக்கும் *சமுதாய அடிப்படையிலான விவசாய சூழலியல் வேளாண்மை முறைமைகளுக்கான குறிப்பிடத்தக்க மாற்றம் ஏற்படுதல் வேண்டும்.* தகுந்த உயிர் பல்வகைத் தன்மையைப் பேணுதல், மற்றும்

[4] Bangkok Declaration (April 1996). Drafted and signed by some 101 CSOsfrom Asia-Pacific, the statement analyzed and recommended priority areas for action as input to the World Food Summit (WFS).

காபன் வெளியேற்றத்தைக் குறைத்தல், கமத்தொழில் சூழலியல் வேளாண்மை முறைமைகள் ஆகியவை பீடை நாசினிகள் மற்றும் உர வகைகள் போன்ற புற உள்ளீடுகளில் தங்கியிருத்தல் குறைவாகும் என்பதால், சடுதியான அதிர்ச்சிகள் மற்றும் விலைத் தளம்பல்களால் விவசாயிகள் பாதிப்படைவதையும் குறைக்கின்றன. அதேபோன்று கமத்தொழில் சூழலியல் முறைமைகள் குறுகிய வழங்கல் சங்கிலிகளையும் உள்நாட்டு ஆட்புல சந்தைகளையும் வலியுறுத்துகின்றன.

**செயற்பாடுகளுக்கான தேவை**

சர்வதேச சமுதாயம், அரசாங்கங்கள் மற்றும் மக்களின் அவசர நடவடிக்கைகளையும் ஒருங்கிணைந்த செயற்பாடுகளையும் தொற்று நோய் தேவைப்படுத்துகின்றது.

### *உடனடி உலகளாவிய பதில் நடவடிக்கைகள்*

• கண்டுபிடிக்கப்பட்டதும் பரவலாகத் தயாரிக்கப்பட்டு எவ்வித கட்டணமும் இன்றி[5] எல்லா நாடுகளுக்கும் மக்களுக்கும் கிடைக்கச் செய்யப்பட வேண்டியதும் புலமைச் சொத்து உரிமைகள் ஆட்சியினால் தடைசெய்யப்படக் கூடாததும் பாதுகாப்பானதும் பயனுறுதியானதுமான "கொவிட் 19 தடுப்பு மருந்துக்கான உலகளாவிய தேவைக்கு நாம் ஆதரவளிக்கின்றோம்.

• கொவிட்-19 தொற்று நோய்க்கு எதிரான போராட்டத்தில் கவனம் செலுத்துவதற்காக உலகின் எல்லாப் பாகங்களிலும் தீவிரமான ஆயுத முரண்பாடுகளில் உடனடியாக யுத்த நிறுத்தத்தை கோரும் பல நாடுகள் மற்றும் குழுக்களுடன் நாமும் இணைந்துகொண்டோம். தமது நடவடிக்கைகள் முரண்பாட்டு கூருணர்வு மிக்கவையாகவும் ஓரங்காட்டுதல் அற்றவையாகவும் சர்வதேச மனித உரிமைகள் சட்டம் மற்றும் நியமங்களுக்கு அமைவானவையாகவும் அத்துடன் முரண்பாட்டினால் பாதிக்கப்பட்ட சமுதாயங்கள், அகதிகள், உள்நாட்டில் இடம்பெயர்ந்த ஆட்கள் (IDPs), அங்வீனமுற்ற மக்கள், பெண்கள், சிறுவர்கள் மற்றும் முதியோர் வடுப்படும் நிலை (vulnerability) தொடர்பாகவும் அரசுகள் கூருணர்வு மிக்கவையாக இருத்தல் வேண்டும்.

• தூண்டுதல் பொதிகள் ஆரம்பிக்கப்படுகின்றவாறு, வறிய அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளுக்கும் விசேடமாக உள்ளக முரண்பாட்டினால் துன்புறும் நாடுகளுக்கும் அவசர கடன் நிவாரணமும் கடனை இரத்துச் செய்தலும் மேற்கொள்ளப்பட வேண்டும் என நாம் கோருகின்றோம்.

• 2019 டிசம்பர் மாதத்தில், காலநிலை மாற்ற சவால்களுக்கு ஈடு கொடுப்பதற்கும் உணவு முறைமைகளை உள்ளடக்கியவையாகவும் நிலைபேறான சமாதானத்துக்கு ஆதரவளிப்பதற்காகவும் 2030 SDG நிகழ்ச்சிநிரல் முழுவதிலும் உணவு முறைமைகள் அணுகுமுறைகளின் பயன்களை உச்சப்படுத்துவதைக் குறிக்கோளாகக் கொண்டு, 2021ஆம் ஆண்டில் உணவு முறைமைகள் உச்சி மாநாட்டைக் கூட்டுவதற்கு ஐ.நா. தலைமையகம் அறிவித்தது. எனினும், உணவுடன் தொடர்பான சிறிய அளவிலான உணவு உற்பத்தியாளர்களின் நிறுவனங்கள் மற்றும் ஏனைய சிவில் சமூக நிறுவனங்களின் அர்த்தபுஷ்டியான பங்கேற்பும் பயனுறுதியான கருத்துகளும் இல்லாதவிடத்து இந்த மாநாடு அர்த்தமற்ற ஒரு செயற்பாடாகவே அமையும்.

### *அரச பதில் நடவடிக்கைகளுக்கான உடனடி செயற்பாடுகள்*

• உணவு உதவி மற்றும் பொருளாதார மீட்சி நிகழ்ச்சித்திட்டங்களுக்கு அப்பால், கொள்கைகளும் நிகழ்ச்சித் திட்டங்களும் சிறிய அளவிலான விவசாயிகள் மற்றும் உற்பத்தியாளர்கள், சுதேச சமுதாயங்கள் மற்றும் நகர வறியோர் ஆகியோரின் தேவைகளுக்கு நேரடியாக பதில் நடவடிக்கை மேற்கொள்ளக்கூடியவாறு விவசாய மற்றும் உணவு முறைமைகளின் ஆளுகை மீள்கட்டமைக்கப்பட்டு மாற்றப்படுதல் வேண்டும்.

• குறிப்பாக வறிய மக்களின் தொற்று நோய் தாக்கங்கள் தொடர்பாக பதில் நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு அரசாங்கங்கள் முன்னுரிமைகளை மாற்றி தேசிய வரவு செலவுத் திட்டத்தையும் மாற்றுதல் வேண்டும். வளங்கள் பயனுறுதியாக பயன்படுத்தப்படுவதை உறுதிப்படுத்தக்கூடியவாறு ஊழல் நிறுத்தப்படுதல் வேண்டும். அத்தகைய சேவைகள் வழங்கலில் வெளிப்படைத் தன்மையை உறுதிப்படுத்துவதற்கு சிவில் சமூகத்தின் பங்கேற்புடன் கண்காணிப்புப் பொறிமுறைகளும் ஊடகங்களின் சுயாதீனத் தன்மையைப் பேணுதலும் தாபிக்கப்படுதல் வேண்டும்.

[5] See GCAP Asia statement, May 2020

• இந்த தொற்று நோயின்போது மேலும் மிகைப்படுத்தப்பட்டுள்ள சுருங்கி வரும் ஜனநாயக இடைவெளிச் சூழ்நிலையில், சிவில் சமூக நிறுவனங்கள், காணி மற்றும் மனித உரிமைகளுக்காகப் போராடுவோர் மற்றும் ஊடகங்களின் உரிமைகள் மதித்துப் பாதுகாக்கப்படுதல் வேண்டும்.

• உணவு உற்பத்தி, கையாளல், மற்றும் பதனிடலில் ஈடுபட்டுள்ள விவசாயிகள், பண்ணைத் தொழிலாளர்கள், மீனவர்கள், சுதேச மக்கள் மற்றும் ஏனையவர்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதுடன் கொவிட் - 19 தொற்றினால் பீடிக்கப்பட்டு பாதிக்கப்படுவதைத் தவிர்ப்பதற்கு உதவுதல் வேண்டும்.

• உணவு உற்பத்தியாளர்களாக, பதனிடுபவர்களாக மற்றும் பராமரிப்புத் தொழிலாளர்களாக சுகாதார மற்றும் உணவு முறைமைகளில் பெண்களின் குறித்த பாத்திரத்தை அங்கீகரித்தல். ஒரு முன்னுரிமையாக மக்களிடையேயும் சமுதாயங்களிடையேயும் ஒற்றுமையை மேம்படுத்துதல், தோன்றும் சவால்களை எதிர்கொள்வதற்கு உடந்தையாக இருப்பதற்கும் ஒத்துழைப்பதற்கும் ஒவ்வொருவருக்கும் வலுவூட்டி ஆதரவளித்தல்.

• கொவிட் - 19 நெருக்கடியின் போதும் அதன் பின்னரும் வறியோருக்கும் மிகவும் பாதிப்படையக்கூடிய மக்களுக்கும் சமூகப் பாதுகாப்பு உபாயங்களை வழங்கி உறுதிப்படுத்தல். அளவிலும் போசாக்கின் தரத்திலும் போதியளவு எல்லோருக்கும் உணவுக்கான உரிமையை உறுதிப்படுத்தல்.

• வெளிநாடுகளிலிருந்தும் நகரப் பிரதேசங்களிலிருந்தும் கிராமப் பிரதேசங்களுக்கு திரும்பிக்கொண்டிருக்கும் புலம்பெயர் தொழிலாளர்களுக்கு உதவி வழங்குதல். எனினும் எல்லோரினதும் பாதுகாப்புக்காக பரிசோதித்தலும் முனைப்பான தொடர்புகளைக் கண்டறிதலும் மேற்கொள்ளப்படுதல் வேண்டும். சிவில் சமூகங்கள், சமுதாயங்கள் மற்றும் மக்களுக்கான உடனடி நடவடிக்கைகள்.

• மனிதாபிமான ஆதரவு இல்லாதபோது, இந்த நெருக்கடியில் சமுதாயங்களும் CSO களும் முக்கிய பாத்திரத்தை வகித்தன. அரசாங்கத்தின் கொவிட் 19 பதில் நடவடிக்கைச் செயற்பாடுகளைத் தொடர்ந்தும் கண்காணித்து அவற்றின் ஆதரவுப் பணிகளை மேற்கொள்ளுமாறு நாம் அவ்வாறாக CSO களை ஊக்குவிக்கின்றோம். விவசாயிகள், மீனவர்கள், முறைசாரா துறை தொழிலாளர்கள், ஓரங்கட்டப்பட்ட மற்றும் பாதிப்புக்கு உள்ளாகக்கூடிய மக்கள், சமுதாய சுகாதார தொழிலாளர்கள், சுதேச சமுதாயங்கள், இளைஞர்கள் மற்றும் பெண்களின் குழுக்கள் ஆகியோரின் தேவைகள் பூர்த்தி செய்யப்பட்டு அவர்களின் குறைபாடுகளை செவிமடுப்பதை உறுதிப்படுத்துவதற்கு அவர்களுடன் ஈடுபடுவதன் மூலம் CSO கள் அவற்றின் பணியை ஒன்றாக தொடர்தல் வேண்டும்.

• புதிய மற்றும் மேலும் அழுத்தம் மிக்க முன்னுரிமைகள் மீது அரசாங்கங்களும் மனிதாபிமான செயற்பாட்டாளர்களும் தமது முயற்சிகளை செலுத்தும்போது, மனித உரிமைகள் நியமங்கள் மீது கவனம் செலுத்தாது, காணி, காடுகள் மற்றும் இயற்கை வளங்கள் மீது தமது கட்டுப்பாட்டை மேற்கொள்வதற்கு தொற்று நோயைப் பயன்படுத்தும் அரச செயற்பாட்டாளர்கள் மற்றும் வணிக அக்கறைகளுக்கு எதிராக CSO களாகிய நாம் விழிப்புடன் இருத்தல் வேண்டும். காணி முரண்பாட்டு சம்பவங்களை, விசேடமாக காணிகளைக் கைப்பற்றுதல் நிகழுமிடத்து நாம் அவற்றைத் தொடர்ந்தும் கண்காணிப்போம்.

• தற்போதைய தொற்று நோயினால் தூண்டப்பட்ட தமது சாதி, இனம், தேசிய இனம், பால்நிலை மற்றும் பாலியல் தன்மை, சமயம், மற்றும் சமூக வகுப்பு ஆகியவற்றின் அடிப்படையில் மக்களுக்கும் தனிப்பட்ட ஆட்களுக்கும் எதிராக எமது சமுதாயங்களிலும் சமூக ஊடகங்களிலும் உள்ள வளர்ந்துவரும் தவறான தகவல்கள், தப்பெண்ணம், ஓரங்காட்டுதல் ஆகியவற்றுக்கு எதிராகச் செயற்படுமாறு நாம் CSO களை ஊக்குவிக்கின்றோம். வைரஸ் தொற்றுகள் அல்லது நோய்கள் பரவுகின்றபோது, வழக்கமாக இனவாதமயப்படுத்தப்பட்ட மக்கள்; அகதிகள், குடிவருவோர் அல்லது புலம்யெர்ந்தோர்; வறிய மக்கள்; மற்றும் சுகாதர தொழிலாளர்கள் கூட குற்றம் சுமத்தப்படும் இலக்குகளாகக் காணப்படுகின்றனர். இனவாதம், தப்பெண்ணம் மற்றும் ஓரங்காட்டுதல் நிகழ்கின்றபோது நாம் எல்லோரும் எழுந்து அவற்றை எதிர்கொள்ளுதல் வேண்டும். மனித உரிமைகளின் உலகளாவிய பிரகடனமே நாம் கவனம் செலுத்த வேண்டிய விடயமாகும்.

• மீட்சிக்கு ஆதரவளித்தல், தயார் நிலையை உறுதிப்படுத்தல், உணவுப் பாதுகாப்பு மற்றும் சுய பூர்த்தியை பின்தொடர்தல், உள்நாட்டு ஈடுகொடுக்கும் தன்மையைக் கட்டியெழுப்புதல் மற்றும் எல்லோருக்குமான நிலைபேறான சமூக-பொருளாதார அபிவிருத்தியை மேம்படுத்தல் ஆகியவற்றுக்கு ஆதரவளிப்பதற்கு நீண்ட கால தீர்வுகளுக்காக CSO கள் சமுதாயங்களுடன் கலந்துரையாடி திட்டமிடுவதை ஆரம்பிக்க வேண்டிய தேவை உள்ளது. உள்நாட்டு ஜீவனோபாயங்களுக்கு ஆதரவளித்து உணவு இறைமையை மேம்படுத்தும் நோக்கத்துடன் முழுமையான, பன்முகப்படுத்தப்பட்ட, பங்கேற்பு மற்றும் காலநிலைக்கு ஈடுகொடுத்து காணியைப் பயன்படுத்தல் மற்றும் அபிவிருத்தித் திட்டங்கள் ஆகியவற்றை வகுப்பதில் அரசியல் மற்றும் வணிகக் குழுக்களை சிவில் சமூகம் ஈடுபடுத்துதலும் வேண்டும்.

**எதிர்பார்ப்பு**

இன்று சவால்கள் காணப்பட்ட போதிலும், சிவில் சமூக நடவடிக்கைகளில் எவ்வித குறைபாடும் இல்லை. ஏற்பாட்டியல் சிரமங்களால் தடைசெய்யப்படாமல், பல சமுதாயங்களில், குழுக்கள், குடும்பங்கள் மற்றும் தனிப்பட்ட ஆட்கள் மற்றும் விசேடமாக இளைஞர்களிடையே தன்னார்வம், மனிதாபிமானப் பணிகள் மற்றும் சிவில் நடவடிக்கை மனோநிலையை இந்தத் தொற்று நோய் தூண்டியுள்ளது. இந்த பிரஜைகளின் நடவடிக்கைகள் சமூகத்தில் மாற்றத்தை ஏற்படுத்தும் சக்தியாக மாறக்கூடியவாறு ஆதரவளித்து, வழிகாட்டி நிலைநிறுத்தப்படுதல் வேண்டும்.

எமது பகுதியாக, நிச்சயமற்ற இந்தக் காலப்பகுதியை நாம் கடந்து செல்வதால், பங்கீடுபாடு உடையவர்களுக்கான அனுபவங்கள், பாடங்கள், புத்தாக்கங்கள் மற்றும் சான்று அடிப்படையிலான விதப்புரைகளுக்கு வசதியளிப்பதற்காக கமநல மறுசீரமைப்பு மற்றும் கிராமிய அபிவிருத்திக்கான ஆசிய NGO கூட்டமைப்பு (ANGOC) அதன் வலையமைப்பினுள்ளும் அதற்கு அப்பாலும் தொடர்ந்தும் பணி புரியும். தற்போதுள்ளவையும் தொடர்ந்து வருகின்றவையுமான சந்ததிகளுக்காக உணவையும் சுதந்திரத்தையும், காணியையும் ஊழியத்தையும், சமாதானத்தையும் சுபீட்சத்தையும் நாம் தொடர்ந்தும் முயன்று பெறுவோம்.

உணவு உற்பத்தியின் கமத்தொழில்-சூழலியல் முறைமைகளின் ஆதரவுடன் விவசாயத்துக்கான சட்டகமாக உணவு இறைமைக்காக ANGOC வலையமைப்பும் அதன் பங்காளர்களும் நீண்ட காலமாக ஆதரவு தேடியுள்ளனர். உணவு முறைமையின் ஜனநாயக கட்டுப்பாடு ஜனநாயகத்தின் இறுதிப் பரிசோதனையாகும். விவசாயம், உணவு உற்பத்தி மற்றும் வணிகத்தை உலகளாவிய சந்தைகளுக்கு நம்பி ஒப்படைப்பதன் மூலம் உணவுப் பாதுகாப்பை உறுதிப்படுத்த முடியாது.

முன்னோக்கிய ஒரு நடவடிக்கையாக, சமுதாய மட்ட திட்டமிடல் மற்றும் அடிப்படையின் நடவடிக்கையாக குடும்ப மற்றும் சமுதாய மட்டத்தில் உணவுப் பாதுகாப்பை மதிப்பிடுவதற்காக, திட்டவட்டமானதும் சமுதாய அடிப்படையிலான தகவல்களை ANGOC வலையமைப்பு உருவாக்கி தேசிய மற்றும் பிராந்திய மட்டங்களில் மக்கள் மைய

**மக்கள் மைய நிலைபேறான அபிவிருத்தியில் ANGOC இன் தொடர்ச்சியான அர்ப்பணிப்பு**

*உணவும் சுதந்திரமும்*
*தொழில்களும் நீதியும்*
*காணியும் ஊழியமும்*
*சமாதானமும் சுபீட்சமும்*

உணவு ஆகக் குறைந்த அடிப்படை மனித உரிமையாகும். ஆனால், சுதந்திரம் இல்லையேல் அது அர்த்தமற்றதாகும். இன்று எமது முயற்சிகளில் பெரும்பாலானவை அரசியல் சுதந்திரத்தை மட்டுமன்றி பொருளாதார சுதந்திரம் மற்றும் வாய்ப்பு ஆகியவற்றையும் மையமாகக் கொண்டிருத்தல் சமனான முக்கியத்துவம் மிக்கதாகும். ஒன்றாக, உணவும் சுதந்திரமும் ஆசிய சமுதாயத்தின் - உண்மையில் எவரொருவரினதும் - மிகவும் அடிப்படையான உரிமையாகும்.

தனித்துவமான ஆசியாவின் சுதந்திர விழுமியம் - எல்லோருக்குமான பிழைக்கும் நெறிமுறை, கடந்த கால பகிரப்பட்ட வறுமையிலிருந்து எதிர்கால சுபீட்சம் - காணப்படுகின்றது. இது சமுதாய அடிப்படையிலான, உலக வணிக தாராளமயமாதல் மற்றும் பூகோளமயமாதல் பற்றிய அக்கறையுள்ள நீதியாகும்.

ஆசியாவின் பரந்ததும் மாறுபட்டதுமான காணி மற்றும் நீர் வளங்களின் துரிதமான சீரழிவுக்கும் பூகோளமயமாதல் தூண்டியுள்ளது. ஆதலால், சுற்றாடல் இயக்கத்தில் அதிகரித்த அளவில் முனைப்பாகப் பங்குபற்றும் ஆசிய பேழு கள் சூழலியல் ஒத்திசைவுக்கான இப்போதைய புதிய அக்கறையை தொடர்ந்தும் தெரிவித்தல் வேண்டும்.

பல ஆசிய விவசாயிகள் தமக்குச் சொந்தமற்ற காணியை உழுகிறார்கள் தற்போதுள்ள கமநல கட்டமைப்புகள் பிணைக்கப்பட்ட ஊழியத்தில் ஆழ்ந்துள்ளன. எனவே, எல்லோரின் பயனுக்காகவும் காணியையும் ஊழியத்தையும் பயன்படுத்துவதற்கு பரவலான விவசாய மறுசீரமைப்புகள் தேவையாக உள்ளன.

இறுதியாக, தாராள மயப்படுத்தல் போராட்டம் மற்றும் இன முரண்பாட்டைக் கொண்ட இன்றைய சகாப்தத்தில், கௌரவத்துடனான மன்னிப்பு மற்றும் கண்ணியமாக சமாதானம் ஆகியவற்றின் தேவை எமக்கு நினைவூட்டப்படுகின்றது. அபிவிருத்தி இன்றி சமாதானம் இருக்க முடியாது என்பதால், சமாதானம் இன்றி சுபீட்சமும் இருக்க முடியாது.

கொள்கை ஆதரவு மற்றும் இயக்கவியலுடன் இந்தக் கிராமிய அடிப்படையிலான முன்னெடுப்புகள் தொடர்புபடுத்தப்படுதலும் வேண்டும்.

சிறிய அளவிலான உணவு உற்பத்தியாளர்களுக்கும் நுகர்வோர்களுக்கும் இடையிலான இடைவெளியைக் குறைப்பதற்காக உள்நாட்டு உணவு மையங்களைத் தாபிப்பதற்கு நாம் வசதியளித்தல் வேண்டும்.

இறுதியாக, ஈடுகொடுக்கின்றதும் இரக்கமுள்ளதுமான நாளைய பொழுதைக் கட்டியெழுப்புவதில் நாம் ஒன்றாக செயற்படுவதால், மேலும் கலந்தாராய்ந்து ஒருவரிடமிருந்து மற்றொருவர் கற்றுக்கொள்வதற்காக இந்தக் கூற்றை விரிவுபடுத்திப் பரப்புவதுடன் கலந்துரையாடலைக் கட்டியெழுப்புவதற்காக நாம் ஏனைய CSO வலையமைப்புகளுக்கு கட்டளையிடுகின்றோம்.

## Signed:

Asian NGO Coalition for Agrarian Reform and Rural Development (ANGOC)
Association for Land Reform and Development (ALRD)
Association of Voluntary Agencies in Rural Development (AVARD)
Community Development Assistance (CDA)
Community Self-Reliance Centre (CSRC)
Ekta Parishad (EP)
Konsorsium Pembaruan Agraria (KPA)
NGO Federation of Nepal (NFN)
Philippine Partnership for the Development of Human Resources in Rural Areas (PhilDHRRA)
Sarvodaya Shramadana Movement (SARVODAYA)
South Asia Rural Reconstruction Association (SARRA)
STAR Kampuchea (SK)

*8 September 2020*

*For those interested in signing on to this Statement in the spirit of solidarity, kindly inform the ANGOC Regional Secretariat at angoc@angoc.org.*

*Asian NGO Coalition for Agrarian Reform and Rural Development (ANGOC)*
*33 Mapagsangguni Street, Sikatuna Village, Diliman 1101 Quezon City, Philippines*
*angoc@angoc.org*
*+63 2 83510581 +63 2 83510011*

*This statement was translated by Sarvodaya Shramadana Movement.*

ANGOC